DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 61/2023

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| Name | சதிஷ்குமார் |
|---|---|
| Father / Husband Name | செல்வராஜ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.11.2024

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னை பல்லாவரத்தில் குடியிருந்து பெயின்டராக வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சசிக்குமார், தாமோதரன், ஏழுமலை, கோகுல்தாஸ், சந்திரசேகர் ஆகியோரை தெரியும். கடந்த 06.12.2023 ம் தேதி வீட்டில் இருந்து நானும் என்னுடன் ரவி, சசிக்குமார், தாமோதரன், ஏழுமலை, கோகுல்தாஸ், சந்திரசேகர், அய்யனார் ஆகியோர் மகேந்திரா வேனில் திருவண்ணாமலை கிரிவலத்திற்கு சென்றுவிட்டு வரும்போது மதுராந்தகம் மேம்பாலம் அருகே பின்னால் இருந்து வந்த ஈச்சர் வாகனம் எங்கள் வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. ஈச்சர் வாகனம் மோதி முன்னால் சென்ற கன்டைனர் லாரியில் மோதி அதன் அடியில் மாட்டிக்கொண்டது. நான் மயக்கம் அடைந்துவிட்டேன். பின்னர் கிரேன் மூலம் வண்டியை பிரித்தார்கள். எனக்கு அய்யனார், ரவி, சந்திரசேகர் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது. மற்றவர்கள் சம்பவ இடத்தில் இறந்துவிட்டார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிசைக்கு சேர்ந்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகார் வாக்குமூலம் நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. நான் வேனின் பின்னாடி சீட்டில் அமர்ந்திருந்தேன். விபத்து நடந்தபோது நான் தூங்கவில்லை விழித்துதான் இருந்தேன். நான் சென்ற வேன் லோடு ஏற்றிச்செல்கிற வேன் என்றாலும் பின் சீட் இருக்காது என்றாலும் சரிதான். டிரைவர் சீட்டில் அமர்ந்திருப்பவரை பின்னால் இருந்து பார்க்க முடியாது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தை பயனிகளை ஏற்றக்கூடாது என்றால் சரிதான். சம்பவம் நடந்து 45 நிமிடத்தில் போலிசார் அங்கு வந்துவிட்டார்கள். புகாரை காலை 10.00 மணியளவில் கொடுத்தேன். மதுராந்தகம் மேம்பாலம் குறித்து போலிசார் விசாரணையில்

சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் பயணம் செய்தது இரவு நேரம் என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் அதிகமாக சென்றது என்றால் சரிதான். வேனை ஓட்டிய டிரைவர் என்னுடன் கிரிவலத்தில் நடந்தார் என்றால் சரிதான்.

3. வண்டியை ஓட்டி திருவண்ணாமலையை அடைந்து கிரிவலத்தில் கலந்துக்கொண்டு மீண்டும் தொடர்ச்சியாக வாகனத்தை ஓட்டியதால் வேனில் உள்ள ஓட்டுநர் தூக்கம் இல்லாமல் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. டமால் என்று சத்தம் கேட்டபிறகு தான் விபத்து பற்றி தெரியும் என்றால் சரிதான். வேனை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம், வாகனத்திற்கு காப்பீடு எதுவும் இல்லை என்றால் சரிதான். போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து 10.00 மணியளவில் காவல் ஆய்வாளர் விசாரித்தார். டாடா ஏசி வாகனம் மற்றும் மகேந்திரா வேன் வாகனம் இரண்டும் வேறுபட்ட வாகனம் என்றால் சரிதான். ஈச்சர் வாகனம் சரியாக சென்றது என்றாலும் நான் சென்ற வேன் வாகனம் முந்தி செல்வதற்காக வலது பக்கம் சாலையில் முன்னேறி சென்றபோது வாகனம் இருப்பதை பார்த்து மீண்டும் இடது பக்கம் வந்து கன்டெய்னர் வாகனம் மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல.

4. நான் பயனம் செய்த வாகனத்திற்கு முன்புறம் மட்டும் தான் சேதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்பதாலும் இழப்பீடு பெறமுடியாது என்பதால் பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.